தினமணி

**செய்யாற்றின் கரையோரம் 110 கி.மீ. தூரம் மழை மர விதைகள் நடும் பணி**

First Published : 05 Jul 2010 11:40:28 AM IST

திருவண்ணாமலை, ஜூலை 4: திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாற்றின் கரையோரம் 110 கி.மீ. தூரம் மழை மர விதைகள் நடும் பணியை மாவட்ட ஆட்சியர் மு.ராஜேந்திரன் ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்தார்.

திருவண்ணாமலை மாவட்டம் ஆனந்தவாடி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ம.கோதண்டபாணி என்பவர் ஆற்றங்கரைகளில் விதைப்பதற்காக 12 ஆயிரம் மழை மர விதைகளை மாவட்ட ஆட்சியரிடம் கடந்த வாரம் அளித்தார். இதையடுத்து கலசப்பாக்கம் ஒன்றியம் பூண்டி ஊராட்சியில் செய்யாற்றின் கரையில் மழை மர விதைகளை நட்டு ஆட்சியர் மு.ராஜேந்திரன் பேசியது:

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் தாலுகாவில் ஜவ்வாது மலையில் தோன்றும் செய்யாறு செங்கம், கலசப்பாக்கம், ஆரணி, வழியாக மாமண்டூர் வரை செல்கிறது. இந்த ஆற்றின் இரு கரைகளிலும் மழை மரம், வேம்பு மர விதைகள் நடப்படும்.

மாவட்ட விளையாட்டு விடுதிகளைச் சேர்ந்த 63 மாணவிகள் இரு குழுக்களாக பிரிந்து இப்பணியை மேற்கொள்வர். ஒவ்வொரு வார இறுதியிலும் இப்பணி மேற்கொள்ளப்பட்டு 110 கி.மீ. தூரம் விதைகள் நடப்படும். மழை மரம் விதை 2 கிலோ, வேம்பு மர விதைகள் 20 கிலோ இதற்காக பயன்படுத்தப்படும்.

அண்ணாமலையார் மலையில் ஏற்கெனவே 5,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. தற்போது மேலும் 5,000 மரக்கன்றுகள் நட குழிகள் தோண்டப்பட்டுள்ளன. தேனிமலையிலும் 5,000 மரக்கன்றுகள் நடப்படும் என்றார் ஆட்சியர்.

கோட்டாட்சியர் பத்மா, வட்டாட்சியர் செல்வரசு, மாவட்ட விளையாட்டு அலுவலர் க.புகழேந்தி, ஆட்சியர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வடமலை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜசேகரன், மோகன் உள்பட பலர் கலந்து கொண்டனர். எஸ்.கே.பி. பொறியியல் கல்லூரியில் வேலைவாய்ப்புக்கான வளாகத் தேர்வு திருவண்ணாமலை, ஜூலை 4: திருவண்ணாமலை எஸ்.கே.பி. பொறியியல் கல்லூரியில் வேலைவாய்ப்புக்கான வளாகத் தேர்வு அண்மையில் நடைபெற்றது.

மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை மாணவர்கள் கலந்து கொண்ட இத்தேர்வை புதுச்சேரி ஸ்டார் மென்பொருள் நிறுவனம் நடத்தியது.

நிறுவன செயல்பாடுகள் குறித்து நிர்வாக இயக்குநர் சுரேஷ் விளக்கினார். பின்னர் கலந்தாய்வு மற்றும் நேர்முகத் தேர்வு நடைபெற்றது.

வளாகத் தேர்வில் சிறப்பிடம் பெற்ற 9 மாணவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. தேர்வு பெற்ற மாணவர்களுக்கு கல்லூரித் தலைவர் கு. கருணாநிதி, செயலர் ஆர். குப்புசாமி, முதல்வர் சொ. குமார், வேலைவாய்ப்பு இயக்குநர் எட்வின் ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 79.99 அடி**

First Published : 05 Jul 2010 02:54:39 PM IST

சேலம், ஜூலை 4: மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 79.99 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 522 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 996 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 41.94 டி.எம்.சி.

**குமரி மாவட்டத்தில் பரவலாக மழை நீடிப்பு**

First Published : 05 Jul 2010 12:49:28 PM IST

நாகர்கோவில், ஜூலை 4: கன்னியாகுமரி மாவட்டத்தில் அணைப்பகுதிகளிலும், பிற பகுதிகளிலும் பரவலாக மழை பெய்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை வரை அணை மற்றும் பிற பகுதிகளில் பெய்த மழையழவு (மி.மீட்டரில்):

பேச்சிப்பாறை-10.2, பெருஞ்சாணி-19.8, சிற்றார் 1- 5.0, சிற்றார் 1- 2.0, சுருளோடு- 19.5, பூதப்பாண்டி-18.4, கன்னிமார்-7.5, நாகர்கோவில்-13, மயிலாடி-4.2, கொட்டாரம் 7.2, புத்தன்அணை-19.6, ஆரல்வாய்மொழி-8.6, முள்ளங்கினாவிளை-14.8, ஆனைக்கிடங்கு-16.4, குருந்தன்கோடு-11.2, அடையாமடை-9.0, கோழிப்போர்விளை- 9.0, நிலப்பாறை-3.0.

ஞாயிற்றுக்கிழமை காலை பேச்சிப்பாறை அணைக்கு 588 கன அடி நீர்வரத்து உள்ளது. 701 கன அடி தண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது.

பெருஞ்சாணி அணைக்கு நீர்வரத்து 310 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து 230 கன அடி தண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது.

பகலில் வெயிலோடு சாரல் மழையும், இரவில் பல மணி நேரம் மழையும் பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**வேதி மாம்பழங்கள் பறிமுதல்**

First Published : 05 Jul 2010 01:22:57 PM IST

புதுக்கோட்டை, ஜூலை 4: பொன்னமராவதியில் வேதிப் பொருள்கள் மூலம் கனியவைக்கப்பட்ட மாம்பழங்களை சுகாதாரத் துறையினர் சனிக்கிழமை பறிமுதல் செய்தனர்.

பொன்னமராவதி பகுதியில், வட்டார மருத்துவ அலுவலர் டி. நவரத்தினசாமி, மருத்துவர் கே. சதாசிவம், சுகாதார ஆய்வாளர்கள் வேல்முருகன், என். உத்தமன், ஆர். ராமலிங்கம், முத்தன் ஆகியோர் பழக் கடைகளில் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, செயற்கை முறையில் கால்சியம் கார்பைடு எனும் வேதிப் பொருள் மூலம் கனியவைக்கப்பட்ட மாம்பழங்களை அவர்கள் பறிமுதல்செய்தனர். மாம்பழங்களை விற்றோர் மீது நடவடிக்கைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், இவ்வாறு பழுக்க வைத்த மாம்பழங்களை விற்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தனர்.

**நாளை திரூரில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

First Published : 05 Jul 2010 01:06:57 AM IST

திருவள்ளூர், ஜூலை 4: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளுக்கு அசோலா உயிர் உரம் உற்பத்தி மற்றும் அதன் பயன்பாடு குறித்த இரண்டு நாள் பயிற்சி முகாம் திரூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் செவ்வாய் மற்றும் புதன்கிழமை

(ஜூலை 6, 7) நடைபெற உள்ளது.

÷இதுகுறித்து ஆராய்ச்சி நிலைய தலைவர் கோ.வி.ராமசுப்பிரமணியன் வெளியிட்டுள்ள அறிக்கை விவரம்:

÷நெல் சாகுபடியில் உயிர் உரமான அசோலாவின் பங்கு மகத்தானது. இதை இடுவதன் மூலம் உரச் செலவு கணிசமாக குறைவதோடு களைகளும் கட்டுப்படுகிறது. இதை கருத்தில் கொண்டு சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் அசோலா உயிர் உர உற்பத்தி மற்றும் நெற்பயிரில் அதன் பயன்பாடு பற்றிய பயிற்சி முகாம் செவ்வாப்பேட்டை அடுத்துள்ள திரூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் செவ்வாய், புதன் (ஜூலை 6, 7) ஆகிய இரண்டு தினங்களில் நடைபெறவுள்ளது.

÷ஆகையால் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் தவறாது பயிற்சி முகாமில் பங்கேற்று அசோலா உயிர் உரம் பற்றிய விரிவான தகவல்களை அறிந்து பயனடையலாம். மேலும் விவரங்களுக்கு விவசாயிகள் 27620705 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று கூறியுள்ளார்.

**விவசாயத்தைக் காப்பாற்ற சிந்தனைக் குழுக்களை உருவாக்க வேண்டும்: ஆடிட்டர் எஸ்.குருமூர்த்தி**

First Published : 06 Jul 2010 02:18:32 AM IST

திருச்சி, ஜூலை 5: விவசாயத்தைக் காப்பாற்ற சிந்தனைக் குழுக்களை உருவாக்க வேண்டும் என்றார் ஆடிட்டர் எஸ்.குருமூர்த்தி.

÷கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், திருச்சியில் உழவர் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் உழவர் தினப் பேரணி மற்றும் மாநாடு திங்கள்கிழமை நடைபெற்றது. இந்த மாநாட்டில் அவர் மேலும் பேசியதாவது:

÷நமது நாட்டில் 50 ஆண்டுகளுக்கு முன்னர் விவசாயம் நன்றாக இருந்தது. நாட்டின் வருமானத்தில் 60 சதவீதம் விவசாயத்தின் மூலமாகக் கிடைத்தது.

÷ஆனால், இன்றைக்கு நாட்டின் மொத்த வருமானத்தில் 11.4 சதவீதம்தான் விவசாயம் மூலம் கிடைக்கிறது. இதை விவசாயத்தின் வீழ்ச்சி என்றுதான் கூற வேண்டும்.

÷அமெரிக்காவின் மொத்த மக்கள் தொகையில் 2 சதவீதத்தினரும், பிரான்ஸில் 9 முதல் 10 சதவீதத்தினரும், மேற்கத்திய நாடுகளில் 2 முதல் 3 சதவீதத்தினரும் விவசாயம் செய்து வருகின்றனர். அந்த நாட்டில் விவசாயிகளற்ற விவசாயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், நமது நாட்டில் விவசாயிகள் மூலம்தான் விவசாயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

÷விவசாயத்தைப் பற்றி பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள் மூலமாக புரிந்து கொள்ள முடியாது. இன்றைய நிலையில் 100 கி.மீ. இடைவெளிக்குள் விவசாயம் வேறுபடுகிறது. விவசாய நிலமும், அதன் குணமும் வேறுபடுகிறது.

÷நமது நாட்டில் இன்றைக்கு 2 லட்சம் நெல் ரகங்கள் உள்ளன. ஒட்டுமொத்தமான விவசாயம் நமது நாட்டில் இல்லை. விவசாயிகளின் பிரச்னையை விவசாயிகளால்தான் தெரிந்து கொள்ள முடியும்.

÷விவசாயப் பிரச்னை பொருளாதாரம் சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல, கலாசாரம், சமூகவியல், ஆன்மிகம், பாரம்பரியம் சம்பந்தப்பட்டதாகும்.

÷நமது நாட்டின் நிலப் பரப்பை விட அமெரிக்க, சீன நாடுகள் மூன்றரை மடங்கு அதிகம் நிலப் பரப்பு கொண்டவையாகும். ஆனால், நமது நாட்டில் உள்ள நிலப் பரப்பைக் கொண்டு 16 கோடி ஹெக்டேர் நிலத்தில் விவசாயம் செய்ய முடியும்.

÷நிலப் பரப்பு பெரியதாக இருந்தாலும் சீனாவில் 10 கோடி ஹெக்டேரில்தான் விவசாயம் செய்ய முடியும். நமது நாட்டில் உள்ள விளைநிலங்களில் சரியாகப் பயிரிட்டால் ஆசிய கண்டத்துக்கே நம்மால் உணவை வழங்க முடியும்.

÷நமக்குத் தெரிந்த விஷயத்தை படித்தவர்கள், விஷயம் தெரிந்தவர்கள், ஓய்வு பெற்றவர்கள் எல்லோரிடம் எடுத்துரைத்து சிந்தனைக் குழுக்களை உருவாக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை எனில் விவசாயத்தைவிட நமக்குத்தான் அதிக பாதிப்பாகும்.

÷உலகின் மொத்த மக்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கு மக்கள் தொகையைக் கொண்டது நமது நாடு. நம் நாட்டின் உணவுத் தேவையை நம்மால்தான் நிறைவு செய்ய முடியும், உலகில் நிம்மதி

ஏற்பட வேண்டும் எனில் பாரத நாடு தன்னிறைவு பெற்றாக வேண்டும். அது உணவில் மட்டுமல்ல, பருப்பு வகைகள், காய்கறிகள் என எல்லாவற்றிலும் தன்னிறைவு பெற வேண்டும்.
÷ரசாயனம் மூலம் விவசாயம் செய்வதால் பெரிய ஆபத்து ஏற்பட உள்ளது. பாரம்பரிய விவசாயத்தைதான் மேற்கொள்ள வேண்டும்.÷போராட்டம், ஆர்ப்பாட்டம் ஒரு பக்கம் இருந்தாலும், சிந்தனை செய்யக்கூடிய குழுக்களை விவசாயிகள் உருவாக்க வேண்டும். இந்த வேலையை அடுத்த 5 ஆண்டுகளுக்கு விடாமல் செய்வேன் என உறுதியேற்க வேண்டும்.
÷விவசாயத்தில் இன்னும் 5 அல்லது 10 ஆண்டுகளில் பெரிய அளவில் மாற்றம் ஏற்பட உள்ளது. அதற்குரிய கட்டாயமும் ஏற்பட்டிருக்கிறது என்றார் குருமூர்த்தி.

**அமராவதி அணையை திறக்க கோரிக்கை**

First Published : 06 Jul 2010 09:36:35 AM IST

உடுமலை, ஜூலை 5: பாசனத்திற்காக அமராவதி அணையை திறந்துவிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
÷உடுமலை எம்எல்ஏ சி.சண்முகவேலு இது குறித்து திங்கள்கிழமை விடுத்துள்ள செய்திக் குறிப்பு:
÷அமராவதி அணையை நம்பி அணைப் பகுதியில் இருந்து தாராபுரம் வரை 20-க்கு மேற்பட்ட குடிநீர்த் திட்டங்கள் உள்ளன. கடந்த 2 மாதங்களாக குடிநீர் கிடைக்காமல் மக்கள் தண்ணீரை விலைக்கு வாங்கும் அவல நிலை உள்ளது. இந்நிலையில் அணையில் 50 அடிக்கு மேல் நீர்மட்டம் இருந்தும் குடிநீருக்காக அணையை திறந்து விட அரசு மறுத்து வருகிறது.
÷ஜூன் 1-ம் தேதி வழக்கமாக பழைய வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிட வேண்டும். ஆனால் போதிய தண்ணீர் அணையில் இருந்தும் அணையை திறக்க அரசு எந்த முயற்சியும் எடுக்காமல் காலதாமதம் செய்து வருகிறது. அமராவதி பிரதான கால்வாய்க்கு உட்பட்ட பகுதிகளில் கால்நடைகளுக்கும் கூட தண்ணீர் கிடைக்காத நிலை நிலவி வருகிறது.
÷மேலும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை நம்பி பயிரிடப்பட்டுள்ள கரும்புப் பயிர்கள் மற்றும் தென்னை மரங்களுக்கு சிறப்புத் தண்ணீர் வழங்க வேண்டும். இந்த நியாயமான கோரிக்கைகளுக்கு தமிழக அரசு செவி சாய்க்கவில்லை என்றால் மக்களையும், விவசாயிகளையும் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும், என்று கூறியுள்ளார்.
÷அமராவதி கரும்பு பயிரிடுவோர் சங்க தலைவர் எஸ்.ஆர்.வேலுசாமி தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள கடிதம்:
÷திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், தாராபுரம் வட்டம் ஆகிய, அமராவதி அணையை நம்பியுள்ள பகுதிகளில் கடந்த சில மாதங்களாக ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சி காரணமாக

நிலத்தடி நீர் மட்டம் குறைந்து விட்டது. இதனால் மக்கள் குடிநீர் கிடைக்காமலும் கால்நடைகளுக்கு போதுமான தண்ணீர் கிடைக்காமலும் சிரமப்படுகின்றனர்.
÷மேலும் நிலைப் பயிரான தென்னை, கரும்பு உள்ளிட்ட பயிர்கள் காயும் தறுவாயில் உள்ளன. பாசனப் பகுதிகளில் இதுவரை மழை பெய்யவில்லை. இந்நிலையில் அமராவதி அணை பகுதியில் தென்மேற்கு பருவமழை பெய்ததால் அணையின் நீர்மட்டம் 50 அடியை தாண்டியுள்ளது. மேலும் அணைக்கு நீர் வரத்தும் உள்ளது.
÷எனவே குடிநீருக்காகவும், கால்நடைகளுக்காகவும், பயிர்களைப் பாதுகாக்கவும் அமராவதி பிரதான கால்வாயில் தண்ணீர் திறந்து விடுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை பகுதியில் அடுத்த ஆண்டு அரவைக்கு தேவையான 6 ஆயிரம் ஏக்கர் கரும்பு பயிர்கள் நடவு செய்யவும் பயிர்களை காப்பாற்றவும் 15 நாட்களுக்கு உயிர் தண்ணீர் திறந்து விடுமாறு கேட்டுக் கொள்கிறோம், என்று கூறப்பட்டுள்ளது.

**மேட்டூர் அணை திறப்பு குறித்து விரைவில் நல்ல முடிவு**

First Published : 06 Jul 2010 09:34:50 AM IST

சேலம், ஜூலை 5: பாசனத்துக்காக மேட்டூர் அணையை திறப்பது குறித்து விரைவில் நல்ல முடிவு எடுக்கப்படும் என்று வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் திங்கள்கிழமை தெரிவித்துள்ளார்.
÷இது குறித்து சேலத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியது:
டெல்டா பாசனத்துக்காக ஆண்டுதோறும் ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படுவது வழக்கம். அணையில் போதுமான அளவு தண்ணீர் இல்லாத காலங்களில் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் அணை திறக்கப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களில் இப்போது கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளில் இருந்து தண்ணீரை எடுத்து விவசாயிகள் நடவு செய்து வருகின்றனர்.
÷நாற்று விடுவதற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று பெரிய அளவில் கோரிக்கைகள் எதுவும் எழவில்லை. அணையில் இருந்து எப்போது தண்ணீர் திறப்பது, எவ்வளவு தண்ணீர் வேண்டும், எவ்வளவு உள்ளது என்பது குறித்து பொதுப் பணித் துறை அதிகாரிகளிடம் முதல்வர் ஆலோசனை நடத்தி வருகிறார்.÷எனவே டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது குறித்து விரைவில் நல்ல முடிவு எடுக்கப்படும் என்றார் அவர்.

தினமலர்

**வாரிசு சான்றிதழ் துரிதமாக வழங்க சிறுவிவசாயிகள் சங்கம் கோரிக்கை**

திண்டிவனம் : காலதாமதம் இன்றி வாரிசு சான்றிதழ் வழங்க கலெக்டருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சிறு விவசாயிகள் முன்னேற்ற சங்க தலைவர் கடவம்பாக்கம் மணி கலெக்டரிடம் அளித்துள்ள மனு: திண்டிவனம், செஞ்சி தாலுகா பகுதியில் பொதுமக்களுக்கு வாரிசு சான்றிதழ் வழங்குவதில் வருவாய்த்துறை அதிகாரிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். இந்திய வாரிசு உரிமைச் சட்டம், வருவாய் துறை கடிதம் எண்.1534ன் படி நேரடி வாரிசுதாரர்களுக்கு தாசில்தார்களே வாரிசு சான்றிதழ் வழங்கலாம். நேரடி வாரிசுதாரர்களாக இல்லாதவர்கள் நீதி மன்றம் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என கூறப்பட்டுள்ளது. இப்பிரச்னையில் மனுதாரர்கள் கோரிக்கை மீது அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்து வாரிசு சான்றிதழ்களை தாமதமின்றி வழங்க கலெக்டர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அந்த மனுவில் கடவம்பாக்கம் மணி கூறியுள்ளார்.

**டிரான்ஸ்பார்மர் இல்லாததால் கரும்பு, வாழை விவசாயிகள் பாதிப்பு**

கடலூர் : கடலூர் அருகே மின் கம்பங்கள் அமைத்து 10 மாதங்களுக்கு மேலாக டிரான்ஸ்பார்மர் வைக்காததால் போர்வெல் மூலம் பாசனம் பெறும் கரும்பு, வாழை விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். கடலூர் அடுத்த வழிசோதனைபாளையம் அய்யனார் கோவில் அருகே உள்ள டிரான்ஸ்பார்மர் அதிக மின்சுமை காரணமாக அடிக்கடி பழுதடைந்தது. இதனை அடுத்து மின்வாரிய அலுவலர்கள் அங்கு இரண்டு டிரான்ஸ் பார்மர்கள் வைப்பதற்கு ஏற்பாடு செய்தனர். கடந்த 10 மாதங்களுக்கு முன் மின் கம்பங்களை நட்டு மின் கம்பிகளையும் இணைப்பு வேலையையும் முடித்தனர். ஆனால் இதுவரை டிரான்ஸ் பார்மர் வைக்கப்பட வில்லை. இதனால் அப்பகுதியில் போர் வெல் மூலம் பாசன வசதி பெறும் 150க்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயம் செய்யப்பட்டுள்ள கரும்பு, வாழை பயிர்கள் போதிய தண்ணீரின்றி கருகும் அபாயம் ஏற்பட் டுள்ளது. இது குறித்து மின்வாரிய அதிகாரிகளுக்கு விவசாயிகள் பலமுறை புகார் தெரிவித்தும் இதுவரை அங்கு டிரான்ஸ்பார்மர் அமைக்கவில்லை. இதனால் சான்றோர்பாளையம், வழிசோதனைபாளையம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த கரும்பு, வாழை விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகள் நலன் கருதி அங்கு விரைவில் டிரான்ஸ்பார்மர் அமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**இலை வழி உரம் கொடுத்தால் உளுந்தில் பூக்கள் உதிராது**

பனமரத்துப்பட்டி: ""உளுந்து செடிகளுக்கு இலைவழி உரம் கொடுப்பதால், பூக்கள் உதிர்வது குறைந்து மகசூல் அதிகரிக்கும்,'' என்று சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட

ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம் தெரிவித்தார்.சேலம் மாவட்டத்தில் பரவலாக உளுந்து, பச்சைப்பயறு, தட்டைப்பயறு உள்ளிட்ட பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது நிலக்கடலை விதைப்புடன் பச்சைப் பயறு மற்றும் தட்டைப் பயறு வகைகளை ஊடுபயிராக விதைக்கின்றனர். உளுந்து, பச்சைப் பயறு, தட்டைப் பயறு ஆகியவை பூக்கும் தருவாயில் நோய் தாக்கி பூக்கள் உதிர்ந்துவிடுவதால், விளைச்சல் பாதிக்கின்றது. பெரும்பாலான விவசாயிகள் உளுந்து தனியாகவும் விதைக்கின்றனர். உளுந்து செடியில் அதிக அளவில் பூக்கள் உதிர்ந்து விடுவதால், விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது.

இதை தடுப்பது குறித்து வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம் கூறியதாவது:தமிழ்நாடு வேளாண் பல்கலையின் பயிர் வினையியல் துறை பயறு வகை பயிர்களுக்கான டி.என்.ஏ.யு. பயறு ஓண்டர் என்ற டானிக் வெளியிட்டுள்ளது. சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில் சுக்கம்பட்டி விவசாயி மகேந்திரன் தோட்டத்தில் வம்பன் 5 என்ற புதிய ரக உளுந்து விதை உற்பத்தி திடல் அமைக்கப்பட்டுள்ளது. ஊளுந்து செடிகள் பூக்கும் தருவாயில் உள்ளதால், பூ உதிர்வதை தடுக்க இலைவழி உரம் கொடுப்பது சிறந்தது. ஒரு ஏக்கருக்கு 2.25 கிலோ டி.என்.ஏ.யு. பயறு ஒண்டர் டானிக்கை 200லிட்டர் தண்ணீரில் கலந்து தேவையான ஒட்டு திரவம் சேர்த்து கைதெளிப்பானில் தெளிக்கலாம். இலை வழி உரம் இடுவதால், வறட்சியை தாங்கி, பூ உதிர்வதை குறைத்து 20 சதவீதம் மகசூல் அதிகரிக்கும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**கொட்டாங்குச்சிக்கு திடீர் மவுசு: ஒரு டன் ரூ.4,500**

வாழப்பாடி: உருக்காலை, கெமிக்கல் தொழிற்சாலைகள், கொசு விரட்டி, சாம்பிராணி மற்றும் அகர் பத்திகள் தயாரிப்பு நிறுவனங்களில் பயன்படுத்தப்படுவதால், கேட்பாரற்று கிடந்த கொட்டாங்குச்சிகளுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஒரு டன் கொட்டாங்குச்சி 4,500 ரூபாய் வரை விலை போவதால், தேங்காயை உடைத்து கொப்பரை எடுக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளும், வியாபாரிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.சேலம் மாவட்டத்தில் வாழப்பாடி, பெத்தநாயக்கன்பாளையம், அயோத்தியாப்பட்டணம், கருமந்துறை, பேளூர், ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, தம்மம்பட்டி பகுதிகளில் ஆண்டு முழுவதும் தேங்காய் விளைவிக்கப்படுகிறது.கொப்பரை தேங்காய்க்கு மார்க்கெட்டில் நல்ல விலை கிடைப்பதால், விலை உயர்வை எதிர்நோக்கி தேங்காயை குவித்து வைக்காமல், கொப்பரை எடுத்து விற்பனை செய்யும் பணியில் தேங்காய் விவசாயிகளும், வியாபாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

கொப்பரை எடுப்பதற்காக, தேங்காயில் இருந்து உரித்தெடுக்கப்படும் தேங்காய் மட்டை நார் பிரித்தெடுக்க பயன்படுவதால், மட்டையினாலும் கணிசமான வருவாய் கிடைத்து வந்தது.

கொப்பரை எடுத்த பின் எஞ்சியிருக்கும் தேங்காய் ஓடான கொட்டாங்குச்சி எதற்கும் பயன்படாத பொருளாக கருதப்பட்டதால் கேட்பாரற்று கிடந்தது. கொட்டாங்குச்சியை குறைந்த விலைக்கு எரிபொருளுக்கு தள்ளிவிட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.தற்போது தமிழகம், புதுச்சேரி, கர்நாடகம் மாநிலங்களில் மட்டுமின்றி, வட மாநிலங்களிலும் செயல்படும் ஏராளமான கெமிக்கல் தொழிற்சாலைகள் மற்றும் உருக்காலைகளிலும் கொசு விரட்டிகள், சாம்பிராணிகள் மற்றும் அகர்பத்திகள் தயாரிக்கும் நிறுவனங்களிலும் கொட்டாச்குச்சியை எரித்து மூலப்பொருளில் ஒன்றாக பயன்படுத்துவது அதிகரித்துள்ளது.அதனால் சேலம், ஈரோடு, காங்கேயம், பெருந்துறை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதியை சேர்ந்த வியாபாரிகள், கொட்டாங்குச்சிகளை கொள்முதல் செய்து தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்ய படையெடுத்து வருகின்றனர். அதனால், கேட்பாரற்று கிடந்த கொட்டாங்குச்சிகளுக்கு மவுசு அதிகரித்ததோடு கடும் கிராக்கியும் ஏற்பட்டுள்ளது. தரத்திற்கேற்ப ஒரு டன் கொட்டாங்குச்சி 4,500 ரூபாய் வரை விலை போகிறது. இதனால் இத்தொழிலில் உள்ள தொழிலாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் உழவர் தின பேரணி**

தர்மபுரி: தர்மபுரியில் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் உழவர் தின பேரணி மற்றும் மாநாடு நடந்தது. மாநில தலைவர் சின்னசாமி தலைமை வகித்து பேரணியை துவக்கி வைத்தார். பொது செயலாளர் சுந்தரம், பொருளாளர் வேலுமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயலாளர் ராஜாசிதம்பரம், சின்னசாமி, துணை தலைவர்கள் பாண்டியன், வாசுநாயுடு, ரேணு, ஆறுமுகம், ரகுபதிராஜா, சின்னிகிருஷ்ணய்யா, கிருஷ்ணமூர்த்தி, சம்பந்தம், பாலு, சிபா, பொது செயலாளர் பட்டுரங்கநாதன் ஆகியோர் கோரிக்கை குறித்து பேசினர்.

தர்மபுரி - திருப்பத்தூர் சாலையில் இருந்து துவங்கிய பேரணி முக்கிய வீதிகள் வழியாக வள்ளலார் திடலில் முடிந்தது. தொடர்ந்து நடந்த மாநாட்டில், "பசும்பாலுக்கு லிட்டருக்கு 25 ரூபாயும், எருமைப்பாலுக்கு 30 ரூபாயும், தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தில் தனி நபர் பயிர் பாதுகாப்புக்கு காப்பீடு தொகை வழங்கிடும் வகையில் சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும். வன விலங்குகளால் பாதிக்கப்டும் பயிர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கிட வேண்டும். மரபணு மாற்றப்பட்ட விதைகள் அனுமதிப்பதை நிறுத்த வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

கந்தசாமி, வேலி, செந்தில்குமார், சக்திவேல், குப்புசாமி, பழனி, லோகநாதன், வெங்கடேசன், சென்னையநாயுடு, ராஜரத்தினம், கிரிஜம்மாள், பெரியசாமி, பழனிசாமி, பாண்டி, அழகர்சாமி, தங்கராஜ், பழனிமுருகன், பெரியண்ணன், கந்தசாமி, வேலுசாமி, ராமசந்திரராஜா, அம்மையப்பன்,

துளசி, செங்கொடிசெல்வன், கிருஷ்ணவேணி, குப்புசாமி, நந்தகுமார், மனோகரன், முத்துகிருஷ்ணன், கண்ணையநாயுடு, தனபால், ராஜராம், ராமச்சந்திரநாயுடு, மாணிக்கம், நீலகண்டன், விஸ்வநாதன், அன்பழகன், ரங்கநாதன், கணேசன், வெங்கட்ராம நாயுடு, சத்ருசங்காரம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மானியத்தை அள்ளித்தரும் "துல்லிய பண்ணை' திட்டம்**

ஈரோடு: தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து பஞ்சாயத்து யூனியன்களிலும், "துல்லிய பண்ணை' திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.ஈரோடு மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் ராமசுப்பிரமணியன் கூறியதாவது:சென்ற 2007-08ல் 100 ஹெக்டேரிலும், 2008-09ல் 400, 2009-10ல் 397 ஹெக்டேரிலும் துல்லிய பண்ணை திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2010-11ல் ஒவ்வொரு யூனியனிலும் 40 ஹெக்டேர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு சொட்டு நீர்ப்பாசன கருவிகள் அமைக்க, 46 ஆயிரத்து 950 ரூபாய் மானியம் வழங்கப்படும். 7,500 ரூபாய் மதிப்புள்ள நீரில் கரையும் உரங்கள் மற்றும் 5,000 ரூபாய் மதிப்புள்ள வீரிய ஒட்டுரக விதைகள் மானியமாக வழங்கப்படும்.

ஹெக்டேர் ஒன்றுக்கு ஒரு விவசாயி 59 ஆயிரத்து 450 ரூபாய் மானியம் பெற, 16 ஹெக்டேருக்கு 16 விவசாயிகள் ஒன்று சேர்ந்து குழுவாக விண்ணப்பிக்க வேண்டும். ஆதிதிராவிட விவசாயிகள் எனில், நான்கு பேர் கொண்டு குழு போதும். இவர்கள் தங்கள் குழுவை சங்கமாக பதிவு செய்து மானியம் பெறலாம்.தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட சொட்டுநீர் பாசன நிறுவனங்களில் ஏதேனும் ஒன்றை விவசாயிகள் விருப்பப்படி, அவர்களே தேர்வு செய்து கொள்ளலாம். தரத்துக்கும், மூன்றாண்டு பராமரிப்புக்கும் அந்த நிறுவனமே உத்தரவாதம் அளித்துள்ளது. எனவே, விவசாயிகள் "துல்லிய பண்ணை' திட்டத்தில் பயன்பெறலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாய தொழிலாளர் சங்க பொதுக்கூட்டம்**

கரூர்: அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில் ஏழாவது அகில இந்திய மாநாட்டு நிதியளிப்பு பொதுக்கூட்டம் கரூர் நொய்யல் குறுக்குச்சாலையில் நடந்தது. கரூர் ஒன்றிய செயலாளர் அன்பரசன் தலைமை வகித்தார். திருப்பூர் எம்.எல்.ஏ., கோவிந்தசாமி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். மாநாட்டு நிதியாக வசூலிக்கப்பட்ட 25 ஆயிரம் ரூபாய் எம்.எல்.ஏ.,

கோவிந்தசாமியிடம் வழங்கப்பட்டது. கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் ரத்தினவேலு, விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் இளங்கோவன், ஒன்றிய செயலாளர் முருகேசன் உட்பட பலர் முன்னிலை வகித்தனர். கரூர் ஒன்றிய குழு உறுப்பினர்கள் பலர் பங்கேற்றனர்.

**வான் மழை பொய்த்ததால் விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு பணத்துக்காக எதிர்பார்ப்பு**

சாயல்குடி: வரத்துக்கால்வாய் இல்லாமல்,வான் மழையும் பொய்த்ததால் பிடி சாவியை அறுத்து காலம் தள்ள முடியாத பரிதாப நிலைக்கு கடலாடி, சாயல்குடி பகுதி விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளதேடு, பயிர் காப்பீடு பணமாவது வருமா? என்ற ஏக்கத்துடன் உள்ளனர். கடலாடி , சாயல்குடி பகுதி விவசாய நிலங்கள் அனைத்தும் மழையை நம்பியே உள்ளன. இந்த பகுதியில் சக்கரத்தேவன் கால்வாய், நாராயன கவேரி, மலட்டாறு உள்ளன. சக்கரைத்தேவன் கால்வாயை மரமத்து செய்ய எத்தனையோ முறை கோரிக்கை வைத்தாலும் கண்டுகொள்வதில்லை. மலட்டாற்றை சொல்லவே தேவையில்லை. பெயருக்கு ஏற்றார் போல் ஆற்றில் தண்ணீரை பார்பதே அறிது. வெள்ளம் வந்தாலும் எந்த வித பயனும் இல்லாமல் மூக்கையூர் கடலில் சேர்கிறது. போதாக்குறைக்கு வான் மழையும் இப்பகுதி மக்களை ஏமாற்றுவதில் வழக்கமாக கொண்டுள்ளது. கடலில் புயல் மையம் கொண்டால் மட்டுமே இங்கு மழை பெய்யும். அதை நம்பியே விவசாயிகள் கந்து வட்டி கார்களிடம் ஐந்து வட்டிக்கு கடனை வாங்கி களை எடுத்து, உரம் வாங்கி வளமாக்கி வைத்திருப்பார்கள். பயிர்களும் நல்ல வளமாக பொதியாக காணப்படும். அவ்வளவுதான் அதன் பின் சிறு மழை தூரலைக்கூட பார்க்கமுடியாது. விவசாயிகளும் வானையே பார்த்து ஏமாந்து போவார் . இப்படி மழையினால் ஏமாந்து போகும் விவசாயிகள் கேப்பை, கம்பு , சோளம் போன்ற பயிர்களைக்கூட பயிரிட முன் வருவதில்லை. இதன் பிரதிபலிப்பே விளை நிலங்கள் அனைத்தும் தரிசு நிலங்களாக மாறி உள்ளன. மழை பொய்த்து போவதால் , கடந்த மூன்று வருடமாக மத்திய அரசும், மாநில அரசும் விவசாயிகளை பயிர்காப்பீடு செய்ய வழிகாட்டியது. இதன் படி விவசாயகளும் பயிர்காப்பீடு செய்து வந்தனர். மறுவிவசாயம் செய்வதற்கு முன்பாக பயிர் காப்பீடு செய்தவர்களுக்கு பணம் வழங்கப்பட்டு வந்தது. இதனால், விவசாயிகள் மத்தியில் ஆறுதலை தந்தது. இதனிடையே , கடந்த வருடம் மழை பொய்த்ததால், குறிப்பாக கடலாடி, சாயல்குடி பகுதியில் "பிடி சாவியை' கூட அறுக்க முடியாமல் மாடுகளையே மேய்ச்சலுக்கு விட்டனர். விதைத்த நெல் அளவு கூட வரவில்லை. அடுத்து விதைப்பதற்கு விதைநெல்லை விலைக்கு வாங்கும் கட்டாயத்தில் உள்ளனர். இந்நிலையில், பயிர் காப்பீடு செய்த பணம் வந்தால் கந்து வட்டிக்காரர்களிடம் சிக்காமல் தப்பலாம் என்ற எண்ணம் விவசாயிகளிடையே நிலவுகிறது. பயிர் காப்பீடு பணத்தை ஓரிரு வாரங்களுக்குள் வழங்கினால் பயனுள்ளதாக இருக்கும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

---

**தென்மேற்கு பருவமழையால்அணைகளின் நீர்மட்டம் உயர்வு**

பொள்ளாச்சி:தென்மேற்கு பருவமழை காரணமாக பி.ஏ.பி., அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியிலும், பொள்ளாச்சி உள்ளிட்ட சமவெளிப்பகுதியிலும் தென்மேற்கு பருவமழை பெய்கிறது. பொள்ளாச்சியில் கடந்த இரண்டு நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.பரம்பிக்குளம் அணையில் 20.88 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு ஆயிரத்து 34 கனஅடி தண்ணீர் வரத்தும், 45 கனஅடி தண்ணீர் வெளியேற்றமும் உள்ளது. அனைத்து பகுதியிலும் தொடர்ந்து மழை பெய்வதால் காண்டூர் கால்வாயில் நேற்று முதல் தண்ணீர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. பரம்பிக்குளம் அணையில் இருந்து தண்ணீர் வெளியேறுவது நிறுத்தம் செய்யப்பட்டதால் அணையின் நீர்மட்டம் உயரத்துவங்கியுள்ளது.ஆழியாறு அணையில் 97.20 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 342 கனஅடி தண்ணீர் வரத்தும், 127 கனஅடி தண்ணீர் வெளியேற்றமும் உள்ளது. திருமூர்த்தி அணையில் 39.09 அடி நீர்மட்டம் உள்ளது. அமராவதி அணையில் 52.30 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 464 கனஅடி தண்ணீர் வரத்து உள்ளது.அனைத்து அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்து, நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால் பி.ஏ.பி., விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையளவு: (மில்லி மீட்டரில்)சோலையாறு- 36, பரம்பிக்குளம்- 29, ஆழியாறு- 4.4, திருமூர்த்தி- 5, மேல்நீராறு- 46, கீழ்நீராறு- 31, வால்பாறை- 36, தூணக்கடவு- 29, பெருவாரிப்பள்ளம்- 33, மேல்ஆழியாறு- 1, காடம்பாறை- 3, வேட்டைக்காரன்புதூர்- 9, பொள்ளாச்சி- 7, சர்க்கார்பதி- 6, மணக்கடவு- 2.1, நல்லாறு- 3, நவமலை- 2.6 என்ற அளவில் மழை பெய்தது.பி.ஏ.பி., அதிகாரிகள் கூறுகையில், "மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் தென்மேற்கு பருவமழை இன்னும் தீவிரமடையவில்லை. ஜூலை, ஆகஸ்ட் மாதத்தில் மழை தீவிரமடைந்து அணைகள் நிரம்ப வேண்டும். அணைகள் தொடர்ந்து நிரம்பும் அளவுக்கு மழை கனமாக பெய்யவில்லை' என்றனர்.

வால்பாறை: வால்பாறையில் பெய்துவரும் பருவ மழையினால் சோலையாறு அணை 160 அடி கொள்ளவில் நேற்று முன் தினம் காலை 67 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 70.58 அடியாக உயர்ந்தது. கடந்த இரண்டு நாளில் அணையின் நீர்மட்டம் 6 அடி உயர்ந்துள்ளது.அணைக்கு விநாடிக்கு ஆயிரத்து 914 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து மானாம்பள்ளி பவர்ஹவுஸ் வழியாக பரம்பிக்குளத்திற்கு 833 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

---

**முருங்கைக்கு விலை இருந்தும் விளைச்சல் இல்லாததால் பாதிப்பு**

ஒட்டன்சத்திரம்: ஒட்டன்சத்திரம் மார்க் கெட்டில் முருங்கைக் காய்க்கு நல்ல விலை கிடைத்த போதிலும் வறட்சி, பலத்த காற்று காரணமாக விளைச்சல் குறைந் துள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.ஒட்டன்சத்திரம் மார்க் கெட்டிற்கு செடி முருங்கை, மரம் முருங்கை மற்றும் கரும்பு முருங்கை விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் செடி முருங்கை அதிக அளவிலும், மரம் முருங்கை குறைந்த அளவிலும் பயிரிடப்பட்டுள்ளன. தாராபுரம் பகுதியில் இருந்து கரும்பு முருங்கை வரத்து உள்ளது.ஒட்டன்சத்திரம் பகுதியில் நடப்பட்ட செடி முருங்கை கடந்த சில நாட் களாக அறுவடை செய்யப் பட்டு வருகிறது. தொடர்ச் சியாக ஏற்பட்ட வறட்சி, பலத்த காற்று காரணமாக முருங்கை செடியில் உள்ள பூக்கள் உதிர்ந்து விட்டது. குறிப்பிட்ட அளவிற்கு மேல் மகசூல் கிடைக்க வாய்ப்பில்லாமல் உள் ளது.செடி முருங்கை கிலோ 18 ரூபாய்க்கும், மரம் முருங்கை 12 ரூபாய்க்கும், கருமபு முருங்கை 15 ரூபாய்க்கும் விற்றது.ஒட்டன்சத்திரம் விவசாயி கதிரொளி கூறுகையில், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு முருங் கைக்கு நல்ல விலை உள் ளது, இருந்த போதிலும் வறட்சி, காற்று காரணமாக விளைச்சல் பாதித்துள்ளதால் எதிர்பார்த்த மகசூல் கிடைக்கவில்லை என்றார்.

**தடுப்பணை உடைக்கப்பட்டதால் விவசாயம் பாதிக்கப்படும் அபாயம்**

சோழவந்தான்: சோழவந்தான் அருகே தென்கரை நிலையூர் கால்வாய் பாலத்திற்காக, தடுப்பணை உடைக்கப்பட்டதால் பல ஏக்கர் விவசாயம் பாதிக்கப்படும்.
அபாயம் ஏற்பட்டு உள்ளது. மதுரை மாவட்டம் தென்கரை பகுதியில் நிலையூர் கால்வாயில் நீர் ஆதாரத்திற்காக தடுப்பணை கட்டப்பட்டது. இப்பகுதியில் உள்ள 800 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் கிடைப்பதுடன், அப்பகுதியில் இருக்கும் கிணறுகளில் நிலத்தடி நீர் குறையாமல் இருக்கும். இதனால் இப்பகுதியில் பயிரிடப்படும் நெல்,வாழை, கரும்பு, வெற்றிலைகொடிக்கால், தென்னை பயிர்களுக்கு கூடுதலாக நீர் ஆதாரம் கிடைத்தது. இரண்டு போக நெல் விவசாயத்தில் கூடுதலாக மகசூல் கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். விவசாயிகளுக்கு இத்தடுப்பணை வரப்பிரசாதமாக அமைந்தது. தென்கரை ஊராட்சியில் ஊத்துக்குழி, நாராயணபுரம், மலைப்பட்டி, புதூர் பகுதி மக்களின் வசதிக்காக நிலையூர் கால்வாயில் ஒராண்டிற்கு முன் பாலம் கட்டப்பட்டது. பாலம் கட்ட இடையூறாக இருந்த தடுப்பணை உடைக்கப் பட்டது. விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்ததால், மீண்டும் தடுப்பணை கட்டித் தருவதாக அப்போது கான்ட்ராக்டர் உறுதி கூறினார். பாலம் பணி முடிந்தவுடன் தடுப்பணை கட்டாமல் சென்றுவிட்டனர். விவசாயிகள் திருவேங்கடம், அழகுமணி கூறுகையில், "நிலையூர் கால்வாய் தண்ணீர் ஒரு போகம் நெல் விவசாயத்திற்கும், தவிர கிணற்று பாசனத்திற்கும் பயன்பட்டது. அணை உடைக்கப்பட்டதால்

தண்ணீர் தேங்க வசதியில்லை. இப்பகுதி கிணறுகளில் நிலத்தடி நீர் குறைந்து கொண்டே வருகிறது. நெல் விவசாயம் போல் மற்ற பயிர்கள் விளைச்சலும் பாதிக்கப்பட்டு உள்ளது. தென்கரை பகுதி விவசாயிகளின் நலன் கருதி தடுப்பணை கட்ட மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்றனர்.

**பயிர் மதிப்பீட்டு அலுவலர்களுக்கு உதவி இயக்குனர் வேண்டுகோள்**

கிருஷ்ணகிரி: ""கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பயிர் மதிப்பீடு ஆய்வு மேற்கொள்ளும் அலுவலர்கள் உரிய நேரத்தில் பகுப்பாய்வு புள்ளி விவரங்களை தர வேண்டும்,'' என்று மாவட்ட புள்ளியல் உதவி இயக்குனர் மனோகரன் வேண்டுகோள் விடுத்தார்.
கிருஷ்ணகிரியில் பயிர் மதிப்பீட்டு ஆய்வு செய்யும் அலுவலர்களுக்கு பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை துணை இயக்குனர் விடுதலை தலைமை வகித்தார். இணை இயக்குனர் ராஜன் முன்னிலை வகித்தார். முகாமில் பயிர் மதிப்பீட்டாய்வு, தேசிய வேளாண் காப்பீடு திட்டங்களின் கீழ் பயிர் அறுவடை பரிசோதனைகள், உணவு பயிர்கள், உணவில்லாத பயிர்களில் புள்ளியல் ஆய்வு, புள்ளியில் துறை, வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்படும் அறுவடை பரிசோதனைகள் ஆகியவை குறித்து பயிற்சி அலுவலர்களுக்கு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

மாவட்ட புள்ளியியல் உதவி இயக்குனர் மனோகரன் அலுவலர்களுக்கு பயிற்சி அளித்து பேசியதாவது: ஆண்டுதோறும் பொருள் இயல் மற்றும் புள்ளியியல் துறையால் வழங்கப்படும் எதேச்சை எண் முறையை பின்பற்றி ஆய்வு நடத்தப்படுகிறது. ஒவ்வொரு வகை பயிரிலும் பயிர் மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய கிராமங்கள் எண்ணிக்கை, பயிர்களின் பரப்பளவு, அளிக்க வேண்டிய விளைச்சல் விபரங்களின் அளவு ஆகியவற்றை கொண்டு மாநில அளவில் நிர்ணயிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை மாவட்டங்களுக்கு இடையே, அந்த பயிர் பரப்பளவு அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இந்த முறையை பின்பற்றி ஒவ்வொரு ஆய்வு பயிர்களுக்கும் தேவையான மாதிரி கிராமங்கள் தேர்வு செய்து, அந்த ஒவ்வொரு மாதிரி கிராமத்திலும் எதேச்சை முறையில் இரண்டு வயல்கள் தேர்வு செய்யப்படும். தேர்வு செய்யப்படும் வயல்களில் அமைக்கப்படும் குறிப்பிட்ட அளவுள்ள பரிசோதனை திடலில் பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு வகை பயிரிலும், இரண்டு அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பயிர்களின் விளைச்சல் (ஒரு ஹெக்டேருக்கு) மொத்த உற்பத்தி ஆகிய விபரங்களை மாவட்ட அளவிலும், மாநில

அளவிலும் துல்லியமாக கணிப்பதற்கு பயிர் மதிப்பீட்டாய்வு, புதுடெல்லி தேசிய மாதிரி ஆய்வு நிறுவன இயக்குனரின் தொழில் நுட்ப ஆலோசனையின் கீழ் நடக்கிறது.

ஆய்வுகளின்போது, புள்ளி விபரங்களை சேகரித்து தொகுத்து பகுப்பாய்வு செய்வதற்கும், விளைச்சல் விபரங்களை துல்லியமாக கணித்து மத்திய, மாநில அரசுக்கும் மற்றும் பிற துறைகளுக்கும் தெரிவிக்கும் பணியையும் புள்ளியியல் துறையினர் மேற்கொள்கின்றனர். எனவே பயிர் மதிப்பீட்டாய்வு நடத்தும் அலுவலர்கள் உரிய நேரத்தில் உரிய இடத்தில் பகுப்பாய்பு பணிகளை மேற்கொண்டு, புள்ளி விவரங்களை உடனுக்குடன் தரவேண்டும்.

**பயிர் மதிப்பீட்டு அலுவலர்களுக்கு உதவி இயக்குனர் வேண்டுகோள்**

கிருஷ்ணகிரி: ""கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பயிர் மதிப்பீடு ஆய்வு மேற்கொள்ளும் அலுவலர்கள் உரிய நேரத்தில் பகுப்பாய்வு புள்ளி விவரங்களை தர வேண்டும்,'' என்று மாவட்ட புள்ளியல் உதவி இயக்குனர் மனோகரன் வேண்டுகோள் விடுத்தார்.
கிருஷ்ணகிரியில் பயிர் மதிப்பீட்டு ஆய்வு செய்யும் அலுவலர்களுக்கு பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை துணை இயக்குனர் விடுதலை தலைமை வகித்தார். இணை இயக்குனர் ராஜன் முன்னிலை வகித்தார். முகாமில் பயிர் மதிப்பீட்டாய்வு, தேசிய வேளாண் காப்பீடு திட்டங்களின் கீழ் பயிர் அறுவடை பரிசோதனைகள், உணவு பயிர்கள், உணவில்லாத பயிர்களில் புள்ளியல் ஆய்வு, புள்ளியில் துறை, வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்படும் அறுவடை பரிசோதனைகள் ஆகியவை குறித்து பயிற்சி அலுவலர்களுக்கு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

மாவட்ட புள்ளியியல் உதவி இயக்குனர் மனோகரன் அலுவலர்களுக்கு பயிற்சி அளித்து பேசியதாவது: ஆண்டுதோறும் பொருள் இயல் மற்றும் புள்ளியியல் துறையால் வழங்கப்படும் எதேச்சை எண் முறையை பின்பற்றி ஆய்வு நடத்தப்படுகிறது. ஒவ்வொரு வகை பயிரிலும் பயிர் மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய கிராமங்கள் எண்ணிக்கை, பயிர்களின் பரப்பளவு, அளிக்க வேண்டிய விளைச்சல் விபரங்களின் அளவு ஆகியவற்றை கொண்டு மாநில அளவில் நிர்ணயிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை மாவட்டங்களுக்கு இடையே, அந்த பயிர் பரப்பளவு அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இந்த முறையை பின்பற்றி ஒவ்வொரு ஆய்வு பயிர்களுக்கும் தேவையான மாதிரி கிராமங்கள் தேர்வு செய்து, அந்த ஒவ்வொரு மாதிரி கிராமத்திலும் எதேச்சை முறையில் இரண்டு வயல்கள் தேர்வு செய்யப்படும். தேர்வு செய்யப்படும் வயல்களில் அமைக்கப்படும் குறிப்பிட்ட அளவுள்ள பரிசோதனை திடலில் பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு வகை

பயிரிலும், இரண்டு அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பயிர்களின் விளைச்சல் (ஒரு ஹெக்டேருக்கு) மொத்த உற்பத்தி ஆகிய விபரங்களை மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் துல்லியமாக கணிப்பதற்கு பயிர் மதிப்பீட்டாய்வு, புதுடெல்லி தேசிய மாதிரி ஆய்வு நிறுவன இயக்குனரின் தொழில் நுட்ப ஆலோசனையின் கீழ் நடக்கிறது.

ஆய்வுகளின்போது, புள்ளி விபரங்களை சேகரித்து தொகுத்து பகுப்பாய்வு செய்வதற்கும், விளைச்சல் விபரங்களை துல்லியமாக கணித்து மத்திய, மாநில அரசுக்கும் மற்றும் பிற துறைகளுக்கும் தெரிவிக்கும் பணியையும் புள்ளியியல் துறையினர் மேற்கொள்கின்றனர். எனவே பயிர் மதிப்பீட்டாய்வு நடத்தும் அலுவலர்கள் உரிய நேரத்தில் உரிய இடத்தில் பகுப்பாய்பு பணிகளை மேற்கொண்டு, புள்ளி விவரங்களை உடனுக்குடன் தரவேண்டும்.

**கர்நாடகத்தில் உற்பத்தி கடும் பாதிப்பு: வெண்பட்டுக்கூடுகள் விலை உயர்வு**

உடுமலை:கர்நாடக மாநிலத்தில் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால், வெண்பட்டுக்கூடுகளுக்கு தேவை அதிகரித்து, விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. இந்தியாவில் பட்டுத்துணிகள் உற்பத்திக்கு 26 ஆயிரம் மெட்ரிக் டன் பட்டுக்கூடு தேவை உள்ள நிலையில் 18 ஆயிரத்து 500 மெட்ரிக் டன் மட்டுமே உற்பத்தியாகிறது. இதனால், உள்நாட்டில் உற்பத்தியாகும் வெண்பட்டுக்கூடுகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது.உடுமலை, கோபி, பழநி, கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளில் வெண்பட்டுக்கூடு வளர்ப்புத் தொழில் அதிகளவு மேற்கொள்ளப்படுகிறது. ஆண்டு முழுவதும் தரமான வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்படுவதால் உடுமலை பகுதி முன்னிலையில் உள்ளது.

பட்டுக்கூடு ரீலிங் தொழில் அதிகளவு உள்ள கர்நாடகா மாநிலத்தில் வெண்பட்டுக்கூடுகளுக்கு நல்ல விலை கிடைத்து வந்தது. இதனால், உடுமலை பகுதி உற்பத்தியாளர்கள் கூடுகளை விற்பனைக்காக அந்த மாநிலத்திற்கு எடுத்து செல்கின்றனர். நாள்தோறும் 2 டன் கூடுகள் உடுமலை பகுதியில் இருந்து விற்பனைக்காக பிற பகுதிகளுக்கும் எடுத்து செல்லப்படுகின்றன.கடந்த சில மாதங்களாக வெண்பட்டுக்கூடுகளின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த ஒரு வாரமாக பட்டுக்கூடுகள் விலை உயர்ந்து கிலோ 270 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால், உடுமலை பகுதி பட்டுக்கூடு உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். 100 முட்டை தொகுதிகளுக்கு சராசரியாக 80 கிலோ வரை உற்பத்தி செய்யும் நிலையில், தற்போதைய விலையால் உற்பத்தியாளர்களுக்கு நல்ல லாபம் கிடைத்து வருகிறது.

---

இதுவரை இல்லாத அளவிற்கு கர்நாடகா சந்தையில் விலை உயர்ந்துள்ளதால் உள்ளூர் சந்தைகளில் நல்ல விலை கிடைக்கிறது.தற்போது, கோவை கொள்முதல் மையத்தில் 250 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. ஆறு மாதங்களுக்கு மேல் கூடுகளின் விலை சரியாமல் தொடர்வதால் இத்தொழிலில் புதிதாக ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.இந்தியாவில் வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தியில் கர்நாடகா மற்றும் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. கர்நாடகாவில் சீதோஷ்ண நிலை மாற்றத்தால் கடந்த சில மாதங்களாக உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. குறுகிய அளவில் உற்பத்தி செய்யப்படும் பிற மாநிலங்களிலும் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால் தமிழ்நாட்டு உற்பத்தியை மட்டுமே ரீலர்கள் நம்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் செல்கிறது.

பட்டு வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் பன்னீர் செல்வம் கூறியதாவது: உடுமலை பகுதி உற்பத்தியாளர்கள் தொழில்நுட்பங்களை சரியாக பின்பற்றுவதால் தரமான வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தியாகின்றன. நூற்புத் திறன் அதிகம் உள்ளதால் கர்நாடகா சந்தையில் உடுமலை கூடுகளுக்கு நல்ல விலை கிடைத்தது.தற்போது மாநில அரசின் கோவை, தர்மபுரி, சேலம், பெண்ணாகரம் கொள்முதல் மையங்களிலும் கிலோவிற்கு 250 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. பட்டு நூலுக்கு தேவை பல மடங்கு உயர்ந்துள்ளதால் வெண்பட்டுக்கூடுகளுக்கு விலை தொடர்ந்து அதிகரிக்கும்.இவ்வாறு, பன்னீர்செல்வம் கூறினார்.

**அமராவதியில் பாசனத்திற்கு தண்ணீர்திறக்காததால் விவசாயிகள் அதிருப்தி**

உடுமலை:அமராவதி அணையின் நீர் மட்டம் 50 அடியை தாண்டியும் குடிநீர் மற்றும் பாசன தேவைக்கு தண்ணீர் திறக்காததால் விவசாயிகளும், பொதுமக்களும் கடும் அதிருப்தி அடைந் துள்ளனர்.தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழையை அடிப்படையாக கொண்டு அமராவதி அணையில் இருந்து ஜூன் 1ல் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும். கடந்தாண்டு வடகிழக்கு பருவ மழை பொய்த்ததால் அணையின் நீர் மட்டம் வேகமாக சரிந்தது.பாசனத்திற்கு தண்ணீர் நிறுத்தப்பட்ட நிலையில், உடுமலை, தாராபுரம், கரூர் பகுதி உள்ளாட்சி அமைப் புகளின் கோரிக் கைக்காக, மே 21 முதல் 25 வரை நான்கு நாட்கள் 2,800 கன அடி தண்ணீர் திறக்கப் பட்டது. இதையடுத்து தற்போது வரை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட வில்லை.

இந்நிலையில், கடந்த மாத இறுதியில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் பருவமழையால் அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. தொடர்ந்து அதிகரித்த நீர்மட்டம், தற்போது 50 அடியை தாண்டியுள்ளது. நீர் வரத்து அதிகரித்தும், பாதிக்கப்பட்டுள்ள பாசனப்பகுதிகளுக்காகவும், குடிநீர் தேவைக்காவும் உடனடியாக தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகளும், உள்ளாட்சி அமைப் பினரும் கோரிக்கை விடுத் தனர்.ஆனால், இதுவரை தண் ணீர் திறக்கப்பட வில் லை. இதனால்,

பாசன பகுதி விவசாயிகளும், உள் ளாட்சி அமைப்பினரும் கடும் அதிருப்தி அடைந் துள்ளனர்.அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு பயிரிடுவோர் சங்கம் சார்பில் அரசுக்கு அனுப்பியுள்ள மனுவில், "அணையின் நீர் மட்டம் உயர்ந்தும் தண்ணீர் திறக்காததால் பாசன பகுதிகளில் கரும்பு, தென்னை போன்ற பயிர் கள் காயும் அவல நிலை உள்ளது. குடிநீர் மற்றும் கால்நடைகளுக்கு போதுமான தண்ணீர் இல்லாமல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கட்டுப் பாட்டு பகுதியில், தண்ணீர் இல்லாததால் மறுதாம்பு பயிர்கள் காய்கிறது. அடுத் தாண்டு அரவைக்கு தேவையான 6,000 ஏக்கர் கரும்பு நடவு செய்யவும், பயிர் களை காப்பாற்றவும் பிரதான கால்வாயில் உடனடியாக தண்ணீர் திறக்க வேண் டும்,' என குறிப்பிடப் பட்டுள்ளது.உடுமலை எம்.எல்.ஏ., சண்முகவேலு வெளியிட்டுள்ள அறிக்கை:திருப்பூர் மாவட்டத்தில் அமராவதி அணையின் எட்டு வாய்க்கால்கள் மூலம் பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. குடிநீர் தேவைக்காக அணையில் 20 அடி நீர் மட்டம் இருந்தபோது கூட தண்ணீர் திறந்து விடப்பட்டது. தற்போது 51 அடி தண்ணீர் கடந்த பல நாட்களாக இருந்தும் அதிகாரிகள் தண்ணீர் திறக்க மறுக்கின்றனர். ஊராட்சி நிர்வாகத்தினர் குடிநீர் தேவைக்காக பலமுறை கோரிக்கை விடுத்தும் தண் ணீர் திறக்கவில்லை.

ஜூன் 1ல் திறக்க வேண்டிய பாசனத்திற்கான தண்ணீரும் திறந்து விடப் பட வில்லை. புதிய கால் வாய் பகுதியில் பயிர்கள் கருகி வருவதை தடுக்க உயிர் தண்ணீர் வழங்க வேண்டும். மக்களின் குடிநீர் தேவையையும், பல ஆயிரம் விவசாயிகளின் பாசன தேவையையும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தொடர்ந்து புறக்கணித்தால், கட்சி தலைமை உத்தரவுப்படி விரைவில் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தப்படும்.இவ்வாறு, சண்முகவேலு எம்.எல்.ஏ., கூறியுள்ளார்.

---

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

***சர்வதேச அளவில் பருத்தி உற்பத்தி 14 சதவீதம் உயரும்***



சர்வதேச அளவில் பருத்தி விலை உயர்ந்து வருகிறது. இதனால், எண்ணெய் வித்துக்கள் மற்றும் உணவு தானியங்களுக்குப் பதிலாக பருத்தி பயிரிடுவதில் விவசாயிகளின் ஆர்வம் அதிகரித்துள்ளது. இதனையடுத்து, 2010–11–ஆம் பருத்தி பருவத்தில், சர்வதேச அளவில் இதன் உற்பத்தி 14 சதவீதம் அதிகரித்து 2.50 கோடி டன்னாக உயரும் என சர்வதேச பருத்தி ஆலோசனைக் குழு மதிப்பீடு செய்துள்ளது. இதற்கு முன்னர் பருத்தி உற்பத்தி 2.20 கோடி டன்னாக இருந்தது.

பருத்தி பருவம் என்பது, ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு விதமாக உள்ளது. நம் நாட்டில், பருத்தி பருவம் அக்டோபர் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதத்தில் நிறைவடைகிறது. உலக அளவில், பருத்தி உற்பத்தியில், இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் முன்னிலை வகித்து வருகின்றன.

சென்ற பருவத்தில், சர்வதேச அளவில், பருத்தி பயன்பாடு 2.45 கோடி டன்னாக இருந்தது. இது, 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் 2.49 கோடி டன்னாக உயரும் என சர்வதேச பருத்தி ஆலோசனை குழு தெரிவித்துள்ளது.